**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8044384

1. District மாவட்டம் : அரியலூர் PS காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு Year ஆண்டு: 2021 FIR No. மு.த.அ. எண்: 3/2021 Date நாள்: 1.10.2021

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Act-1988 (as amended in 2018) Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: & CrPC Sections பிரிவுகள்: 102 CrPC
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 30.09.2021 Date from : நாள் முதல் 14.30 மணி Date to : நாள் வரை 21.45 மணி
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 1.10.2021 Time நேரம் : 16.00 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 1.10.2021 Time நேரம் : 16.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் வட்டார போக்குவரத்து அலுவலகம், [illegible] 8 கி.மீ — தெற்கு அரியலூர் மாவட்டம்.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. சரவணன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சிவஞானமணி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 38/2021 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மண்டல துணை வட்டாட்சியர் அரியலூர் மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (திருக்கானகம்) (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியரகம், அரியலூர் வருவாய்த்துறை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) பெரியசாமி மோட்டார் வாகன ஆய்வாளர் Gr I RTO office, [illegible], அரியலூர்
2) ஹமாபா அம்மாள், கண்காணிப்பாளர் RTO office, [illegible], அரியலூர்.
3) நாகலிங்கம் s/o முத்துசாமி, Rtd RTO Driver, நரியன்தெரு, ராம்நகர், ஸ்ரீரங்கம், திருச்சி.
4) குழந்தைவேல் s/o தங்கவேல், சிவானி டிரைவிங் ஸ்கூல் அரியலூர்.
5) வெங்கடாசலபதி s/o ராஜேந்திரன், ஸ்ரீ டிரைவிங் ஸ்கூல், ஆண்டிமடம், அரியலூர்.
6) மகாலிங்கம் s/o கிருஷ்ணன், லக்ஷ்மி டிரைவிங் ஸ்கூல், ஜெயங்கொண்டம்.
7) ஜெயக்குமார் s/o அண்ணாதுரை சரண் டிரைவிங் ஸ்கூல், அரியலூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் தொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

— தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 1/10/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 1/10/2021
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் R. CHANDRASEKAR
Rank: நிலை DSP/VAC/ARL

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 03/2021 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி :

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது** இன்று 01.10.2021 ஆம் தேதி பகல் 16.00 மணிக்கு அரியலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு.சி.சரவணன், மண்டல துணை வட்டாட்சியர் மற்றும் துணை ஆய்வுக்குழு அலுவலர் தற்காலிகம், வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர் என்பவர் என் முன் ஆஜராகி கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் திரு.சி.சரவணன், மண்டல துணை வட்டாட்சியர் மற்றும் துணை ஆய்வுக்குழு அலுவலர் தற்காலிகம், வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர் மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அரியலூர், பொருள் அரியலூர் மாவட்டம், கீழப்பழூர், வட்டார போக்குவரத்து அலுவலகம் 30.09.2021 அன்று அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேல் நடவடிக்கை வேண்டி புகார் கொடுத்தல் தொடர்பாக. 1. திருச்சி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரின் கடித எண். A1/157/2021 Dt:30.09.2021, 2.அரியலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் RC.No.A2/413/2021 Dt:30.09.2021, 3.திடீர் சோதனை செயல்முறைகள், நாள்30.09.2021. நான் அரியலூர் மாவட்ட வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். அரியலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண். RC.No.A2/413/2021 Dt:30.09.2021 ன் படி மாவட்ட துணை ஆய்வுக்குழுவின் தற்காலிக அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளேன். அரியலூர் மாவட்டம், கீழப்பழுவூரில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலர்கள் பொது மக்களிடம் வாகனங்கள் பதிவு செய்ய, பெர்மிட் வழங்க, ஓட்டுனர் உரிமம் வழங்க மற்றும் ஓட்டுனர் உரிமம் புதுப்பிக்க இடைத்தரகர்கள் மூலம் கையூட்டு கேட்டு பெறுவதாக அரியலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 30.09.2021 ஆம் தேதி மதியம் சுமார் 14.30 மணியளவில் திரு.சி.சரவணன், த/பெ. சிவஞானமணி, மண்டல துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர் மாவட்டம் மற்றும் துணை ஆய்வுக்குழு அலுவலர் தற்காலிகம் ஆகிய நான், அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.R.சந்திரசேகர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் மேற்படி கீழபழூரில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அரியலூர் வட்டார போக்குவரத்து துறை அலுவலகமானது அரியலூரிலிருந்து தஞ்சாவூர் செல்லும் மெயின் ரோட்டில் கீழப்பழூர் சாலைக்கு மேற்கில் கிழக்கு பார்த்தவாறு வாசலுடைய தரைதளத்துடன் கூடிய இரண்டு மாடிக்கட்டிடம் ஆகும். தரைதளத்தில் போர்ட்டிகோவும் அதன் உள்ளே ஒரு பெரிய ஹாலும், ஹாலுக்கு தெற்கு பக்கம் வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் அறையும், ஹாலுக்கு மேற்கே வட்டார போக்குவரத்து அலுவலரின் அறையும், அந்த அறைக்கு தெற்கே பதிவறையும், அதை தொடர்ந்து மேற்கு பக்கமாக ஒரு வராண்டாவும் அதை ஒட்டினார் போல்

கழிவறையும் உள்ளது. நேர்முக உதவியாளர் அறைக்கு தெற்கே அலுவலக அறையும், அந்த அறையின் கீழ்புறம் தெற்கிலிருந்து வடக்காக இளநிலை உதவியாளர்-II அறையும், மத்தியில் இளநிலை உதவியாளர்- I அறையும் வடக்கு பக்கம் உதவியாளர் (கணக்கு) அவர்களின் அறையும், அலுவலக அறைக்கு தென்மேற்கு மூலையில் ஒரு பதிவறையும் உள்ளது. மெயின் ஹாலுக்கு வடக்கு பக்கம் மாடிப்படியும், அதற்கு அடுத்தார் போல் காத்திருப்போர் அறையும், அதற்கு அடுத்து LLR Room-ம் அதற்கு மேற்கு பக்கம் பான்ட்டண் Room-ம் அதற்கு தெற்கு பக்கம் சர்வே ரூமும், அதற்கு அடுத்து மோட்டார் வாகன ஆய்வாளர்-Gr-II அவர்கள் அறையும், தொடந்து மோட்டார் வாகன ஆய்வாளர்-Gr-I அவர்கள் அறையும் உள்ளது. இந்த கட்டடத்தின் முதல் தளம், தரைத்தளம் போலவே அமைக்கப்பட்டுள்ளது. முதல் தளத்தில் மீட்டிங் ஹால் மற்றும் ஆவணங்கள் அறையும் உள்ளது. மேற்படி அலுவலகத்தின் தரைத்தளத்தை திடீர் ஆய்வு செய்த போது மோட்டார் வாகன ஆய்வாளர்-Gr-I திரு.பெரியசாமி மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு.A.ரவிச்சந்திரன், இளநிலை உதவியாளர்கள் திரு.கோபாலகிருஷ்ணன் மற்றும் திருமதி.லெட்சுமி ஆகியோரும் தட்டச்சர் திரு.மதியழகன் மற்றும் அலுவலக உதவியாளர் திரு.ராமன், Bonton நிறுவன ஊழியர் திரு.சக்திகுமார், திரு.அஜித்குமார், மற்றும் திரு.கண்ணன் ஆகியோர்களும் இருந்தனர். இவர்களை தவிர அலுவலகத்துக்கு உள்ளே நின்றிருந்த நபர்களை விசாரத்ததில் 1)திரு.நாகலிங்கம், த/பெ முத்துசாமி, வட்டார போக்குவரத்து அலுவலரின் ஓய்வு பெற்ற ஓட்டுநர், 47, நரியன் தெரு, ராம் நகர், ஸ்ரீரங்கம், திருச்சி, 2)திரு.குழந்தைவேல், த/பெ தங்கவேல், சிவாணி டிரைவிங் ஸ்கூல், அரியலூர், 3)திரு.வெங்கடாசலபதி, த/பெ ராஜகோபால், அபி டிரைவிங் ஸ்கூல், வடக்கு தெரு, பெரியதத்தூர், ஆண்டிமடம், அரியலூர் மாவட்டம், 4)திரு.மகாலிங்கம், லெட்சுமி டிரைவிங் ஸ்கூல், 5)திரு.ஜெயக்குமார், த/பெ அண்ணாதுரை, மேலத்தெரு, சாத்தம்பாடி அஞ்சல், உடையார்பாளையம் தாலுக்கா, அரியலூர் மாவட்டம், சரண் டிரைவிங் ஸ்கூல் (அலுவலக உதவியாளர்), 6)திரு.பாலமுருகன், த/பெ தங்கையன், வடக்கு தெரு, கருப்பிலா கட்டளை, அரியலூர், ஓம் சக்தி டிரைவிங் ஸ்கூல், 7)திரு.ரவிச்சந்திரன், த/பெ பெரியசாமி, மணகெதி, உடையார்பாளையம் தாலுக்கா, அரியலூர். சீனிவாசா பஸ் டிரான்ஸ்போர்ட் மேலாளர் மற்றும் 8)திரு.அப்துல் ஹக்கீம், த/பெ முஸ்தப்பா, தோப்பாரி தெரு, ஜெயங்கொண்டம், ART பஸ் உரிமையாளர் ஆகியோர்கள் அலுவலகத்தில் இருந்தனர். மேலும் அலுவலகத்தில் பொது மக்கள் சிலரும் இருந்தனர். வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.ப.பிரபாகர் அவர்கள் இன்று 30.09.2021 ஆம் தேதி ஒரு நாள் மட்டும் சிறு விடுப்பில் சென்றுள்ளார். வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்த அனைவரிடமும் திடீர் சோதனை செய்ய வந்த நோக்கத்ததை தெரிவித்தும் அவர்களை விஜிலென்ஸ் குழுவினருடன் தனித்தனியாக விசாரித்தும் சோதனை மேற்கொண்ட போது மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I திரு.பெரியசாமி அவர்களை சோதனை செய்தபோது அவரது பர்ஸில் ரூ.3,240/-ம் பேக்கில்

ரூ.8,030/-ம், KRD TVS Motor company என்று எழுதப்பட்ட மஞ்சள் நிற கோப்பில் ரூ.2,700/-ம் இருந்தது சிறப்பு பதிவேட்டின் படி ரூ.520 பதிவு செய்யப்பட்டிருந்தது, அந்த பணம் குறித்து கேட்ட போது அது மதிய உணவிற்கு செலவு செய்துவிட்டதாகக் கூறினார். எனவே ரூ.13,970/- பற்றி சரியான முகாந்திரம் கூறாததால் கைப்பற்றப்பட்டது. திரு.A.ரவிச்சந்திரன், வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.1,000/- இருந்தது அந்த பணம் குறித்து கேட்ட போது தனது இருச்சக்கர வாகனத்திற்கு ரூ.800-க்கு பெட்ரோல் போட்டுவிட்டதாகவும், மீதம் ரூ.1000/- மட்டும் இருப்பதாக கூறினார். அந்த பணம் அவரது சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அந்த சமயத்தில் திருமதி.ஹபிபா அம்மாள், கண்காணிப்பாளர் அவர்கள் கழிவறை நோக்கி வேகமாக சென்றார் அவரை பின் தொடர்ந்து பெண் காவலர் சென்றபோது அவர் அங்கிருந்த ஜன்னல் வழியாக ஏதோ தூக்கி எறிந்தார் சந்தேகத்தின் பேரில் காவல் அலுவலர்கள் உதவியுடன் வெளியில் சென்று சோதனை செய்தபோது அங்கு ரூ.3000/- கிடந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் விசாரித்தபோது பயத்தில் தான் தூக்கி எறிந்ததாக ஒப்புக்கொண்டார். மேலும் அவரது பர்ஸை சோதனை செய்த போது ரூ.3,570/- இருந்தது, சிறப்பு பதிவேட்டில் ரூ.1000/- பதிவுசெய்யப்பட்டுள்ளது. மீதத் தொகை ரூ.5,570/- குறித்து விசாரித்த போது சரியான முகாந்திரம் கூறாததால் கைப்பற்றப்பட்டது. திரு.ஜா.முகமதுரபிக், கணக்காளர் அவர்களை சோதனை செய்தபோது ரூ.230/- இருந்தது, அந்த பணம் அவரது சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திருமதி.லெட்சுமி, இளநிலை உதவியாளர் அவர்களை பெண் காவலர் உதவியுடன் சோதனை செய்தபோது அவரிடம் ரூ.200/- இருந்தது, அந்த பணம் அவரது சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.கோபாலகிருஷ்ணன், இளநிலை உதவியாளர் அவர்களை சோதனை செய்தபோது ரூ.370/- இருந்தது, அந்த பணம் அவரது சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.மதியழகன், தட்டச்சர் அவர்களை சோதனை செய்தபோது ரூ.100/- இருந்தது, அந்த பணம் அவரது சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு. சக்திகுமார், Bonton Staff அவர்களை சோதனை செய்தபோது ரூ.40 இருந்தது, அந்த பணம் அவரது சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.அஜித்குமார், Bonton Staff அவர்களை சோதனை செய்தபோது ரூ.200/- இருந்தது, அந்த பணம் அவரது சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.கண்ணன், Bonton Staff அவர்களை சோதனை செய்தபோது ரூ.200/- இருந்தது, அந்த பணம் அவரது சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.ராமன், அலுவலக உதவியாளர் அவர்களை சோதனை செய்தபோது ரூ.130/- இருந்தது, அந்த பணம் அவரது சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.நாகலிங்கம், த/பெ முத்துசாமி, ஓய்வு பெற்ற வட்டார போக்கவரத்து அலுவலரின் ஓட்டுநர், 47, நரியன் தெரு, ராம் நகர், ஸ்ரீரங்கம், திருச்சி அவர்களை

சோதனை செய்தபோது அவரிடம் ரூ.5,080/- இருந்தது, அந்த பணம் பற்றி சரியான முகாந்திரம் கூறாததால் கைப்பற்றப்பட்டது. திரு.குழந்தைவேல், த/பெ தங்கவேல், சிவாணி டிரைவிங் ஸ்கூல், அரியலூர் அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.16,700/- இருந்தது, அந்த பணம் பற்றி சரியான முகாந்திரம் கூறாததால் கைப்பற்றப்பட்டது. திரு.வெங்கடாசலபதி, த/பெ ராஜகோபால், அபி டிரைவிங் ஸ்கூல், வடக்கு தெரு, பெரியதத்தூர், ஆண்டிமடம், அரியலூர் மாவட்டம் அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.8,600/- இருந்தது, அந்த பணம் பற்றி சரியான முகாந்திரம் கூறாததால் கைப்பற்றப்பட்டது. திரு.மகாலிங்கம், த/பெ கிருஷ்ணன், பரணம், செந்துறை தாலுக்கா, அரியலூர், லெட்சுமி டிரைவிங் ஸ்கூல், ஜெயங்கொண்டம் அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.13,400/- இருந்தது, அந்த பணம் பற்றி சரியான முகாந்திரம் கூறாததால் கைப்பற்றப்பட்டது. திரு.ஜெயக்குமார், த/பெ அண்ணாதுரை, மேலத்தெரு, சாத்தம்பாடி அஞ்சல், உடையார்பாளையம் தாலுக்கா, அரியலூர் மாவட்டம், சரண் டிரைவிங் ஸ்கூல் (அலுவலக உதவியாளர்) அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.2,400/- இருந்தது, அந்த பணம் பற்றி சரியான முகாந்திரம் கூறாததால் கைப்பற்றப்பட்டது. மேற்படி பணத்தை மோட்டார் வாகன அலுவலர்களுக்கு தங்களது வேலைகளை செய்ய லஞ்சமாக கொடுப்பதற்கு வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்று கருதி மேல் நடவடிக்கைக்காக இந்த திடீர் சோதனையின் போது தயார் செய்த செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. மற்ற நபர்களிடமிருந்த பணத்திற்கு அவர்கள் தகுந்த முகாந்திரம் கூறியதால் அவர்களிடமிருந்த பணத்தை அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் வட்டார போக்குவரத்து அலுவலக நிலையான முன்பணப் பதிவேடு, கொடுபடா முன்பணப் பதிவேடு, துணை ரொக்கப் பதிவேடு மற்றும் ரொக்கப் பதிவேடு ஆகிய பதிவேடுகளை பார்த்ததில் கையிருப்பில் பணம் எதுவும் இல்லை. முன்னாள் இராணுவ வீரர் கொடிநாள் நிதி ரசீது (1207401-1207453) 53X100 = 5,300/- வசூல் செய்யப்பட்ட தொகை இருப்பில் உள்ளது. கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் அலுவலர்களின் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் முகவரி | சொந்த பணம்/தனி நபர் பண இருப்புப் பதிவேட்டின் படி | கைப்பற்றப் பட்ட ரூபாய் | திரும்ப ஒப்படைக்க ப்பட்ட ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. | திரு.பெரியசாமி, மோட்டார் வாகன ஆய்வாளர்-Gr-I, வட்டார போக்குவரத்து அலுவலகம், கீழப்பழூர், அரியலூர் மாவட்டம். | ரூ.520/- | ரூ.13,970/- | - |
| 2. | திரு.A.ரவிச்சந்திரன், வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கீழப்பழூர், அரியலூர் மாவட்டம். | ரூ.1800/- | - | ரூ.1000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | திருமதி.ஹபிபா அம்மாள், கண்காணிப்பாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கீழப்பழூர், அரியலூர் மாவட்டம். | ரூ.1000/- | ரூ.5,570/- | ரூ.1000/- |
| 4. | திரு.ஜா.முகமதுரபிக், கணக்காளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கீழப்பழூர், அரியலூர் மாவட்டம். | ரூ.280/- | - | ரூ.230/- |
| 5. | திருமதி.லெட்சுமி, இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கீழப்பழூர், அரியலூர் மாவட்டம். | ரூ.200/- | - | ரூ.200/- |
| 6. | திரு.கோபாலகிருஷ்ணன், இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கீழப்பழூர், அரியலூர் மாவட்டம். | ரூ.370/- | - | ரூ.370/- |
| 7. | திரு.மதியழகன், தட்டச்சர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கீழப்பழூர், அரியலூர் மாவட்டம். | ரூ.100/- | - | ரூ.100/- |
| 8. | திரு. சக்திகுமார், Bonton Staff. வட்டார போக்குவரத்து அலுவலகம், கீழப்பழூர், அரியலூர் மாவட்டம். | ரூ.160/- | - | ரூ.40/- |
| 9. | திரு.அஜித்குமார், Bonton Staff, வட்டார போக்குவரத்து அலுவலகம், கீழப்பழூர், அரியலூர் மாவட்டம். | ரூ.200/- | - | ரூ.200/- |
| 10. | திரு.கண்ணன், Bonton Staff, வட்டார போக்குவரத்து அலுவலகம், கீழப்பழூர், அரியலூர் மாவட்டம். | ரூ.200/- | - | ரூ.200/- |
| 11. | திரு.ராமன், அலுவலக உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கீழப்பழூர், அரியலூர் மாவட்டம். | ரூ.130/- | - | ரூ.130/- |
| 12. | திரு.நாகலிங்கம், த/பெ முத்துசாமி, ஓய்வு பெற்ற வட்டார போக்குவரத்து அலுவலரின் ஓட்டுநர், 47, நரியன் தெரு, ராம் நகர், ஸ்ரீரங்கம், திருச்சி | - | ரூ.5,080/- | - |
| 13. | திரு.குழந்தைவேல்,த/பெ தங்கவேல், சிவாணி டிரைவிங் ஸ்கூல், அரியலூர் | - | ரூ.16,700/- | - |
| 14. | திரு.வெங்கடாசலபதி, த/பெ ராஜகோபால், அபி டிரைவிங் ஸ்கூல், வடக்கு தெரு, பெரியதத்தூர், ஆண்டிமடம், அரியலூர் மாவட்டம். | - | ரூ.8,600/- | - |
| 15. | திரு.மகாலிங்கம், த/பெ கிருஷ்ணன், பரணம், செந்துறை தாலுக்கா, அரியலூர், லெட்சுமி டிரைவிங் ஸ்கூல், ஜெயங்கொண்டம். | - | ரூ.13,400/- | - |
| 16. | திரு.ஜெயக்குமார், த/பெ அண்ணாதுரை, மேலத்தெரு, சாத்தம்பாடி அஞ்சல், உடையார்பாளையம் தாலுக்கா, அரியலூர் மாவட்டம் சரண் டிரைவிங் ஸ்கூல் (அலுவலக உதவியாளர்) | - | ரூ.2,400/- | - |
| மொத்தம் | | **4,960/-** | **65,720/-** | **3,470/-** |
| கைப்பற்றப்பட்ட மொத்தப் பணம் | | | ரூ.**65,720/-** | |

வட்டார போக்குவரத்து அலுவலக வருகை பதிவேடு, சிறப்பு பதிவேடு-2021 மற்றும் தற்செயல் விடுப்பு பதிவேடு, Bonton Staff வருகை பதிவேடு, ராஜேந்திரன் மற்றும் தனசாமி என்ற பெயரில் KRD TVS Motor Company-ன் இரண்டு கோப்புகள் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. Bonton Staff தற்செயல் விடுப்பு பதிவேடு பராமரிக்கப்படவில்லை. இந்த திடீர் சோதனை செயல்முறை நடவடிக்கை இன்று 30.09.2021-ம் தேதி இரவு 21.45 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி நபர்கள் சரியான முகாந்திரம் கூற இயலாததால் அந்த பணம் யாரிடமாவது கையூட்டாக பெற்று அல்லது கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பணம் கைப்பற்றப்பட்டதால், அந்த பணம் லஞ்சப் பணம் (Illegal Gratification) எனக் கருதப்படுவதால் மேற்படி அலுவலர்கள் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் 30.09.2021 ஆம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் ஆய்வு செயல்முறை நடவடிக்கைகள், ரொக்கம் ரூ.65,720/- மற்றும் இதர ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளது. தங்கள் உண்மையுள்ள (ஒப்பம்) திரு.சி.சரவணன், மண்டல துணை வட்டாட்சியர் மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (தற்காலிகம்), வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர். பணிந்து சமர்பிக்கப்படுகிறது: அய்யா, இன்று 01.10.2021 – ஆம் தேதி மதியம் 16.00 மணிக்கு புகாரைப் பெற்று அரியலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண். 3/2021, சட்டப்பிரிவுகள் 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) மற்றும் சட்டப்பிரிவு 102 CrPC –ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

1/10/2021

(R.சந்திரசேகர்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
அரியலூர்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலுடன் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர்/ சிறப்பு நீதிபதி, அரியலூர் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

1/10/2021

(R.சந்திரசேகர்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
அரியலூர்.